**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 545** **நாள்: 07.10.2026**

**மாண்புமிகு செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் திரு. ஆர். குமார் அவர்கள், அடையாறு மண்டலத்தில் நடைபெற்று வரும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

**பெசன்ட் நகர், திடீர் நகர், திருவான்மியூரில் உள்ள மருதீஸ்வரர் நகர் மற்றும் பாரதிதாசன் தெருவில் வசிக்கும் பொதுமக்களைச் சந்தித்து கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.**

மாண்புமிகு செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் திரு. ஆர். குமார் அவர்கள், இன்று (07.10.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-179 மற்றும் 180க்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பெசன்ட் நகர், திடீர் நகர் மற்றும் திருவான்மியூர் லட்சுமிபுரம், பாரதிதாசன் தெருவில் வசிக்கும் பொதுமக்களைச் சந்தித்து கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

மாண்புமிகு செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் திரு. ஆர். குமார் அவர்கள், அடையாறு மண்டலம், வார்டு-179க்குட்பட்ட எலியட்ஸ் கடற்கரை சாலையில் உள்ள மார்க்கெட் பகுதி, பெசன்ட் நகரில் 7ஆவது அவென்யூ மற்றும் திடீர் நகர் ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளின் கோரிக்கைகளை கேட்டறிந்து, கோரிக்கைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வார்டு-179க்குட்பட்ட இராதாகிருஷ்ணன் சாலை, கலாசேத்ரா சாலை மற்றும் வார்டு-180க்குட்பட்ட திருவான்மியூர் மாளவியா அவென்யூ ஆகியவற்றில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளைப் பார்வையிட்டு பருவமழைக்கு முன்னதாக முடித்திடவும், திருவள்ளுவர் சாலையில் உள்ள நீரேற்று நிலையத்தினை பார்வையிட்டு, முன்னெச்சரிக்கைப் பணிகளை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, சோழபுரத்தில் உள்ள அம்மா உணவகத்தினைப் பார்வையிட்டு, வழங்கப்படும் உணவின் தரம் குறித்து உணவருந்தி ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களிடம் கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு-180க்குட்பட்ட திருவான்மியூர், மருதீஸ்வரர் நகரில் உள்ள நியாயவிலைக் கடையினைப் பார்வையிட்டு, பொருட்களின் இருப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், திருவான்மியூரில் மருதீஸ்வரர் நகர், லட்சுமிபுரம், பாரதிதாசன் தெருவில் கழிவுநீர் பிரச்சினை மற்றும் பட்டா தொடர்பான கோரிக்கைகளுக்காக பொதுமக்களைச் சந்தித்து கலந்துரையாடி, உடனடி நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மண்டல அலுவலர் திரு.என்.தட்சிணாமூர்த்தி, வேளச்சேரி தாலுக்கா தாசில்தாரர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள்தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**